www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு - 2023

8 - ஆம் வகுப்பு

## அறிவியல்

காலம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 X 1 = 15

1. ஒரு கோளக ஆடியின் குவியத் தொலைவு 10 செ.மீ. எனில் அதன் வளைவு ஆரம் ..............
   அ) 10 செ.மீ. ஆ) 5 செ.மீ. இ) 20 செ.மீ. ஈ) 15 செ.மீ.
2. படுகோணம் $40^0$ எனில், அதன் எதிரொளிப்புக் கோணம் ................. ஆகும்.
   அ) $10^0$ ஆ) $40^0$ இ) $20^0$ ஈ) $90^0$
3. திரவ நிலையிலிருந்து திட நிலைக்கு மாறும் நிகழ்விற்கு .................. என்று பெயர்.
   அ) பதங்கமாதல் ஆ) குளிர்வித்தல் இ) உறைதல் ஈ) படிதல்
4. பாதரசத்தின் குறியீடு
   அ) Ag ஆ) Hg இ) Au ஈ) Pb
5. மின்னோட்டம் என்பது ...................... அளவு ஆகும்.
   அ) அடிப்படை ஆ) துணை நிலை இ) வழி ஈ) தொழில் சார்ந்த
6. பாஸ்கல் விதி இதில் பயன்படுகிறது
   அ) நீரியல் உயர்த்தி ஆ) தடை செலுத்தி இ) அழுத்தப்பட்ட பொதி ஈ) மேற்கண்ட அனைத்தும்
7. வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்கு காரணமான நிறமி
   அ) நீரேறிய இரும்பு ஆக்சைடு ஆ) மெலனின் இ) ஸ்டார்ச் ஈ) ஓசோன்
8. பிரைன் என்பது ................. இன் அடர் கரைசல் ஆகும்.
   அ) சோடியம் சல்பேட் ஆ) சோடியம் குளோரைடு இ) கால்சியம் குளோரைடு ஈ) சோடியம் புரோமைடு
9. மனிதனுக்கு சாதாரண சளி உண்டாக்கும் நுண்ணுயிரி ................ என அழைக்கப்படுகிறது.
   அ) பிளாஸ்மோடியம் ஆ) இன்ஃப்ளுயன்ஸா இ) விப்ரியோகாலரே ஈ) ஆப்தோ வைரஸ்
10. மண் அரிப்பை தடுக்கும் தாவரங்கள்
    அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள் இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்
11. இருசொற் பெயரிடு முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ....................
    அ) 1970 ஆ) 1975 இ) 1978 ஈ) 1623
12. உடலின் உள்சூழ்நிலையைச் சீராகப் பராமரித்தல் .................... எனப்படும்.
    அ) தன்னிலை காத்தல் ஆ) ஹோமியோபைட்ஸ் இ) ஹோமியோஹைனசிஸ் ஈ) ஹோமியோ பிலிக்ஸ்
13. காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் ................. உள்ளது.
    அ) காற்று ஆ) ஆக்சிஜன் இ) கார்பன்டை ஆக்சைடு ஈ) நைட்ரஜன்
14. அசோட் எனப்படுவது எது?
    அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன் இ) சல்பர் ஈ) கார்பன் டை ஆக்சைடு
15. பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில் ..................... பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 10 X 1 = 10

16. ................ குறை கடத்தியாகப் பயன்படுகிறது.
17. ஒளிச்சேர்க்கை என்பது ........... முன்னிலையில் நிகழும் ஒரு வேதிவினையாகும்.
18. உலர்பனி .................. ஆகப் பயன்படுகிறது.
19. மிகப்பெரிய செல் .......... ன் முட்டையாகும்.
20. அளவிடப்பட்ட மதிப்பு உண்மை மதிப்புடன் நெருங்கி இருப்பது ................ எனப்படும்.
21. தாவரங்களில் நீர் மேலே ஏறுவதற்குக் காரணம் ............என்ற திரவ பண்பே ஆகும்.
22. நுண்ணுயிரிகளை ............ ன் உதவியுடன் காணமுடியும்.
23. மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்த உதவும் மூலிகைத் தாவரம் ...........
24. வாகனங்களில் பின்காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி ...............
25. வெப்பக் கட்டுப்படுத்தி என்பது ..................... ஐ மாறாமல் வைத்திருக்கிறது.



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

**III பொருத்துக.** 10 X 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 26. | கார்பன் டை ஆக்சைடு | - | வளிமண்டல அழுத்தம் |
| 27. | பாதரசமானி | - | உரம் |
| 28. | நைட்ரஜன் | - | உயிரினங்கள் சுவாசித்தல் |
| 29. | ஆக்ஸிஜன் | - | தீயணைப்பான் |
| 30. | ஈஸ்ட் | - | குளிர்ப்பதனப் பெட்டி |
| 31. | உளர்பனி | - | பாக்டீரியா |
| 32. | புரதம் | - | குளுக்கோஸ் |
| 33. | கார்போஹைட்ரேட் | - | உயிரி வினையூக்கி |
| 34. | காசநோய் | - | நீலப்பச்சைபாசி |
| 35. | சயனோஃபைசி | - | அமினோ அமிலம் |

**IV சரியா? தவறா? என கூறுக.** 5 X 1 = 5

36. CFC என்பது ஒரு மாசுபடுத்தியாகும்.
37. சின்னம்மை ஒரு தொற்று நோயாகும்.
38. பைனஸ் ஒரு மூடிய விதைத் தாவரம்.
39. 4.482 எண்ணின் முழுமையாக்கப்பட்ட மதிப்பு 4.58.
40. கலைடாஸ்கோப்பில் நாம் காணும் அழகிய தோற்றத்திற்குக் காரணம் ஒளிவிலகலே.

**V ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 15 X 2 = 30

41. ஒளி எதிரொளிப்பு விதிகளைக் கூறுக.
42. குழி ஆடி மற்றும் குவி ஆடிகளின் பயன்களுள் இரண்டினைத் தருக.
43. ஏன் ஆலயமணிகள் உலோகங்களால் செய்யப்படுகின்றன?
44. மோல் - வரையறு.
45. அளவீடு என்றால் என்ன?
46. ஒரு வளிமண்டல அழுத்தம் - வரையறு.
47. பாஸ்கல் விதியைக் கூறி அதன் பயன்பாடுகளைத் தருக.
48. பின்வரும் குறியீடுகளால் குறிக்கப்பெறும் தனிமங்களின் பெயர்களை எழுதுக. அ) Na ஆ) Ba இ) W ஈ) Al
49. நோய்க் கிருமிகள் என்றால் என்ன?
50. வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியங்களின் பெயர்களை எழுதுக.
51. இருவிதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.
52. இருசொற் பெயரிடு முறை என்பது என்ன? எடுத்துக்காட்டு தருக.
53. புரோகேரியோடிக் செல் - வரையறு.
54. காற்று நுண்ணறைகளின் பணிகளைக் கூறுக.
55. வளர்சிதை மாற்றம் - வரையறு.
56. வெப்பக் கடத்தல் என்றால் என்ன?
57. ஒரு கலோரி - வரையறு.
58. மாசுபடுதல் என்றால் என்ன?
59. மாங்குதல் என்றால் என்ன? எ.கா. தருக.
60. வெவ்வேறு வகையான திசுக்களை வகைப்படுத்துக.

**VI அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 6 X 5 = 30

61. பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும். ***(அல்லது)***
கலோரிமீட்டர் வேலை செய்யும் விதத்தை தெளிவான படத்துடன் விவரி.
62. கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக. ***(அல்லது)***
உராய்வின் பல்வேறு வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
63. காரணம் கூறுக. அ) உணவுப் பொருட்களை உறையீடு செய்வதற்கு அலுமினியத் தகடுகள் பயன்படுகின்றன.
ஆ) வெப்பநிலைமானிகளில் பாதரசம் பயன்படுத்தப்படுகிறது. ***(அல்லது)***
வேதிவினை மூலம் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் விளைவுகளை விளக்குக.
64. புரோபயாடிக் பற்றி சிறுகுறிப்பு வரைக. ***(அல்லது)***
ஜிம்னோஸ்பெர்ம்களின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.
65. மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து பாகங்களைக் குறி. ***(அல்லது)***
சுவாச செயலியல் நிகழ்வுகளை விளக்கு.
66. அமில மழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்? ***(அல்லது)***
கீழ்க்கண்ட பொருட்கள் ஆக்ஸிஜனுடன் எரியும் போது உருவாகும் சேர்மங்களை எழுதுக.
அ) கார்பன் ஆ) சல்பர் இ) பாஸ்பரஸ் ஈ) மெக்னீசியம் உ) இரும்பு



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CS CamScanner